மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 140/2016 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | ரமா | நாள் | 28.08.2024 |
| தகப்பனார் பெயர் | பச்சமுத்து | | |

பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-

1) எதற்காக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், ச.எண்.851/17 ல் உள்ள தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது. அதை பிரதிவாதி தனக்கு தடத்திற்காக வேண்டுமென கூறி பிரச்சனை செய்ததால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கில் 2ம் வாதி என் தாயார் என்றால், சரிதான். நான் என்ன பணி செய்துவருகின்றேன் என்றால், கிராம நிர்வாக அலுவலராக பணிசெய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல் விசாரணை பிரமான பத்திரிக்கையில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால், சரிதான். மேற்படி பிரமான பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்துதான் அதில் கையெழுத்து செய்தேனா என்றால், ஆமாம்.

2) தற்போது நான் அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்லும் சர்வே எண் என்னவென்றால், கோனூர் மேற்கு கிராம ச.எண்.851/17 ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் முதல் விசாரணை பிரமான பத்திரிக்கையில் 2வது பத்தியில் 2வது வரியில் தாவா சொத்திற்குரிய ச.எண்.251/17 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது தாவா சொத்திற்குரிய பழைய சர்வே எண்ணாகும். நான் சொல்வது தவறானது என்றாலும், தாவா சொத்திற்குரிய பழைய சர்வே எண்.137/2 என்றாலும், சரிதான்.

3) அவ்வாறுள்ள நிலையில் என் பிரமான பத்திரிக்கையில் 2வது பத்தியில் 2வது வரியில் தாவா சொத்திற்குரிய ச.எண்.251/17 என நான் குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால், சரிதான். ஆனால், மேற்படி ச.எண்.251/17 என்ற சர்வே எண் ச.எண்.137/2 ற்கும் முந்தைய சர்வே எண் ஆகும். என் வழக்குரை சொத்து விவரத்தில் மேற்படி சர்வே எண்.851/17 ற்குரிய அனைத்து பழைய சர்வே எண்களையும் குறிப்பிட்டுள்ளேனா என்றால், குறிப்பிட்டுள்ளேன்.

4) தற்போது என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சொத்து விவரத்தில் எந்த இடத்தில் அவ்வாறு பழைய சர்வே எண்களை நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால், பழைய சர்வே எண்களை நான் குறிப்பிடவில்லை. புதிய சர்வே எண்ணை மட்டும் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு பழைய சர்வே எண்ணை என் வழக்குரையில் நான் குறிப்பிட்டுள்ளதாக நான் சொல்வது தவறானது என்றால், சரிதான்.

5) தாவா சொத்திற்குரிய சர்வே எண்ணையே சரியாக பரிசீலிக்காமல் நான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. தாவா சொத்திற்குரிய பழைய சர்வே எண்.251/17 என நான் உறுதியாக சொல்கிறேனா என்றால், ஆவணங்களை பரிசீலித்தால்தான் அது குறித்து என்னால் உறுதியாக சொல்ல இயலும். தாவா சொத்திற்குரிய ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் மேற்படி தாவா சொத்திற்குரிய பழைய சர்வே எண்ணான ச.எண்.251/17 குறித்து குறிப்புகள் உள்ளதா என்றால், இல்லை.

6) நான் தவறான சர்வே எண்ணை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. தாவா சொத்திற்குரிய தற்போதைய ச.எண்.851/17 ஐ சரியாக குறிப்பிட்டுதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தற்போது ச.எண்.851/17 ல் உள்ள நிலத்தை நாங்கள் அனுபவித்து வருவதற்கு என்ன ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோம் என்றால், என் தந்தை பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம். தற்போது என்னிடம் காட்டப்படும் என் முதல் விசாரணை பிரமாண பத்திரத்தின் ஆவணப்பட்டியலில் அவ்வாறு ஏதேனும் தான செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. அவ்வாறு நான் சொல்வதுபோல் எந்த செட்டில்மெண்ட் ஆவணத்தையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ளேன். ஆனால் என் பிரமாண பத்திரிக்கையில் அது இடம் பெறவில்லை.

7) சர்வே எண்.851/17 ற்குரிய எங்களது பெயரிலோ அல்லது எங்களது முன்னோர்கள் பெயரிலோ உள்ள எவ்வித உரிமை மூல ஆவணங்களையோ, வருவாய்

ஆவணங்களையோ நாங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனத்தில் நாங்கள் இல்லாததால்தான் அவ்வாறு எந்த ஆவணத்தையும் நாங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், தவறான சர்வே எண்ணை குறிப்பிட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல.

8) 2ம் வாதி பெயரில் உள்ள UDR பட்டாவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். அதில் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், ச.எண்.851/18 குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி பட்டா தாவா சொத்திற்கு தொடர்புடையது அல்ல என்றால், சரியல்ல. மேற்படி பட்டா நிலத்தை ஒட்டித்தான் தாவா சொத்து அமைந்துள்ளது. மேற்படி என் தாயார் 2ம் வாதி பெயரிலுள்ள ச.எண்.851/18 க்கு தொடர்புடைய UDR பட்டாவை பற்றி என் வழக்குரையிலோ, என் வழக்குரை சொத்து விவரத்திலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால், குறிப்பிட்டுள்ளேன். மேற்படி சர்வே எண்.851/18 ற்குரிய UDR பட்டாவிற்கும், இவ்வழக்கிற்கும் என்ன தொடர்பு என்றால், தாவா சொத்தை ஒட்டி மேற்படி சர்வே எண் அமைந்துள்ளது.

9) ச.எண்.851/18 ல் உள்ள நிலத்தை பிரதிவாதி ஏதேனும் தொந்தரவு செய்தாரா என்றால், இல்லை. அதனால் மேற்படி ச.எண்.851/18 ஆனது, இவ்வழக்கு சொத்திற்கு தொடர்பற்றது என்றால், சரியல்ல.

(பிரதிவாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.